ஹெய்ட்டி

## 14 நாட்களுக்குப் பின்னர் இடிபாடுகளிலிருந்து ஒருவர் உயிருடன் மீட்பு

ஹெய்ட்டியை உலுக்கிய பூகம்ப இடிபாடுகளிலிருந்து 14 நாட்களின் பின்னர் 35 வயதுடைய நபர் ஒருவர் கடந்த செவ்வாய்கிழமை உயிருடன் மீட்கப்பட்டுள்ளார். கட்டட இடிபாடுகளுக்குள் இருந்து இவரை மீட்டெடுத்த அமெரிக்கப்



படையினர், அந்த நபர் பலத்த காயங்களுக்கு உள்ளாக வில்லை எனினும் உள்ளுறுப்புகள் சிதைவடைந்திருக்கலாம் எனத் தெரிவித்துள்ளனர். மீட்கப்பட்ட நபர் உடனடியாக வைத்திய பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். கட்டட இடிபாடுகளுக்குள் இருந்து இதுவரை 132 பேர் உயிருடன் காப்பாற்றப்பட்டுள்ளதாக ஐ.நா பேச்சாளர் தெரிவித்தார்.

இதேவேளை, நிலநடுக்கம் ஏற்பட்டபோது ஹெய்ட்டி தலைநகர் போர்தோ பிரின்சின் முக்கிய சிறையில் இருந்து ஏராளமான கைதிகள் தப்பித்திருந்தனர். இவர்களைச் சமாளித்துக் கட்டுப்படுத்துவதில் சர்வதேச உதவிகள் தேவைப்படுவதாக ஹெய்ட்டி காவல்துறைத் தலைமை அதிகாரி ஒருவர் கோரிக்கை விடுத்துள்ளார். சூறையாடல், கொள்ளையடித்தல் போன்ற செயல்களைச் சிறையிலிருந்து தப்பிய இந்தக் கைதிகளே செய்துவருவதாக காவல்துறை அதிகாரி கூறியுள்ளார். அண்மையில் ஹெய்ட்டி வந்திறங்கியுள்ள அமெரிக்கப் படைகள் அங்கே ஏற்கனவே நிலைகொண்டுள்ள ஐ.நா. துருப்பினர் ஆகியோரிடம் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக போர்த்தோ பிரின்சிலிருந்து வெளிவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, அந்நாட்டில் மீண்டும் தொடர்ச்சியாக நிலநடுக்கங்கள் இடம்பெற்று வருகின்றன. ரிக்டர் அளவில் 5.1 ஆக அவை இருந்துள்ளன. பாதிக்கப்பட்ட ஹெய்ட்டிக்கு நிதி உதவிகள் குவிந்து வருகின்றன. உலக வங்கியிடம் பெற்ற கடன் நிலுவையில் உள்ளது. அடுத்த 5 ஆண்டுகளுக்கு இந்த கடனுக்கான தவணைத் தொகையை தள்ளுபடி செய்வதாக உலக வங்கி அறிவித்துள்ளது. மீதிக் கடனையும் இரத்து செய்ய ஆய்வு செய்து வருவதாக உலக வங்கித் தலைவர் ரொபார்ட் ஜெல்லிக் கூறியுள்ளார். மேலும், சர்வதேச நிதியம் வழங்கத் திட்டமிட்டுள்ள கடனுக்கு 2011ம் ஆண்டு இறுதிவரை வட்டி கிடையாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்பிறகு, மிகக்குறைவாக, 0.5 சதவீத வட்டியே வசூலிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, உதவி வழங்கும் நாடுகள் எதிர்வரும் மார்ச் மாதம் நியூயோர்க்கில் கூடி ஹெய்ட்டிக்கு உதவி வழங்குவது குறித்து ஆராயவுள்ளன.

எதியோப்பியா

## விமானம் கடலில் விழுந்ததில் 90 பேர் பலி

எதியோப்பிய நாட்டு போயிங் 737 ரக விமானம் ஒன்று, கடந்த திங்களன்று லெபனான் நாட்டில் உள்ள பெய்ரூட் நகர விமான நிலையத்தில் இருந்து எதியோப்பிய தலைநகர் அடிஸ் அபாபா நகருக்கு புறப்பட்டது. இதில் 83 பயணிகளும், விமானிகள் மற்றும் சிப்பந்திகள் ஏழு பேரும் என 90 பேர்




இருந்துள்ளனர். விமானம் புறப்பட்ட 5 நிமிடங்களில் அது விமான கட்டுப்பாடு அறையில் உள்ள ராடார் திரையில் இருந்து மறைந்து விட்டது. அது மத்திய தரைக்கடலில் விழுந்ததாக தெரியவந்தது. கரையில் இருந்து சுமார் 3.5 கி.மீ. தொலைவில் கடலில் அது விழுந்தது.

மோசமான வானிலை காரணமாக இந்த விபத்து ஏற்பட்டதாக முதல்கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவருகின்றது. இதில் விமானத்தில் இருந்த 90 பேரும் பலியானார்கள். அவர்களில் லெபனான் நாட்டுக்கான பிரான்சு தூதரின் மனைவி மார்லா சான்செஸ் பிட்டன் மற்றும் 54 பேர் லெபனான் நாட்டை சேர்ந்தவர்கள், 22 பேர் எத்தியோப்பியர்கள், ஈராக், சிரியா ஆகிய நாடுகளில் இருந்து தலா ஒருவர் உள்பட மொத்தம் 83 பயணிகள் பயணம் செய்திருந்தனர். அனைவரும் பலியாகியுள்ளனர். தூதர் டெனிஸ் பிட்டன் கடந்த செப்டம்பர் மாதம் தான் லெபனான் தூதராக பதவி ஏற்றார். லெபனான் நாட்டில் நூற்றுக்கணக்கான எதியோப்பியர்கள் வீட்டு வேலை செய்பவர்களாக இருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

விமானம் தீப்பிழம்பாக வெடித்து சிதறி கடலில் விழுந்ததை பார்த்ததாக கடற்கரையோரம் உள்ள கிராமங்களை சேர்ந்தவர்களிடம் இருந்து காவல்துறையினருக்கு தகவல் கிடைத்தது. இதையடுத்து, உடனடியாக மீட்பு பணி தொடங்கப்பட்டது. உலங்குவானூர்தி, படகுகளில் சென்று லெபனான் நாட்டு இராணுவம், கடற்படை, ஐ.நா. படையினர் மீட்பு

ஆப்கானிஸ்தான்

# விமானத் தகர்ப்பு முயற்சிக்கு பின்லேடன் பொறுப்பேற்பு

தந்தைக்கு ஆபத்தென்றால் உலகம் முழுவதும் பேரழிவு ஏற்படும் மகன் லேடன் எச்சரிக்கை

கடந்த மாதம் அமெரிக்காவில் தோல்வியில் முடிவடைந்த விமான தகர்ப்பு முயற்சிக்கு சர்வதேச பயங்கரவாதியான ஒசமா பின்லேடன் பொறுப்பு ஏற்றுள்ளார். அமெரிக்காவில் மேலும் பல தாக்குதல்கள் நடத்தப்போவதாகவும் அவர் புதிய மிரட்டல் விடுத்துள்ளார். கடந்த டிசம்பர் மாதம் 25ம் திகதி நத்தார் தினத்தன்று அமெரிக்க விமானத்தை தகர்க்க முயற்சி நடந்தது. நைஜீரியாவை சேர்ந்த அப்துல் முத்தலீப் என்ற தீவிரவாதி தன் தொடையில் மறைத்து வைத்திருந்த வெடிமருந்தை ஊசி மூலம் எடுத்து கலக்கச்செய்து அதன் மூலம் வெடிக்க வைக்க முயற்சி செய்தும், அந்த முயற்சி தோல்வியில் முடிந்தது. இதனால் விமானம் தப்பியது. அதில் பயணம் செய்த 300 பயணிகளும் உயிர் தப்பினார்கள்.

விமானத்தை தகர்க்க முயன்றதாக அப்துல் முத்தலீப் கைது செய்யப்பட்டான். அவனிடம் நடந்த விசாரணையில், தான் அல்-ஹைடாவை சேர்ந்தவன் என்றும், யேமன் நாட்டில் பயிற்சி பெற்றதாகவும் தெரிவித்தான்.

இந்நிலையில், இந்த தகர்ப்பு முயற்சிக்கு அல்-ஹைடா தலைவர் ஒசாமா பின்லேடன் பொறுப்பு ஏற்றுள்ளார். அவரது பேச்சு, ஒலி வடிவில் அல்-ஜசீரா தொலைக்காட்சியில் ஒலிபரப்பப்பட்டது. ஒசாமாவிடம் இருந்து (அமெரிக்க அதிபர்) ஒபாமாவுக்கு' என்ற தலைப்பில் ஒலிபரப்பான அந்த பேச்சில், பின்லேடன் கூறியுள்ளதாவது, வீரஞ்செறிந்த போர் வீரன் அப்துல் முத்தலீப் பயணம் செய்த விமானம் மூலமாக தங்களுக்கு (ஒபாமா) செய்தி அனுப்பியது நான்தான். அது, ஏற்கனவே 2001ம் ஆண்டு செப்டம்பர் 11ம் திகதி அமெரிக்கா மீது விமான தாக்குதல் நடத்திய வீரர்கள் கொடுத்த செய்தி போன்றதுதான். வார்த்தைகள் மூலமாக எங்களது செய்தியை தங்களிடம் சேர்க்க முடிந்திருந்தால், அதை விமானம் மூலமாக அனுப்பி இருக்க மாட்டோம்.

பாலஸ்தீனத்தில் நாங்கள் அமைதியாக வாழும் நிலை ஏற்படும்வரை, அமெரிக்கா தனது பாதுகாப்பை பற்றி கனவில் கூட நினைக்க முடியாது. காசா பகுதியில் எங்கள் சகோதரர்கள் மோசமான சூழ்நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கும்போது, அமெரிக்கர்கள் அமைதியாக வாழ்வது சரியல்ல. எனவே, இஸ்ரேலுக்கு அமெரிக்காவின் ஆதரவு நீடிக்கும்வரை, அமெரிக்காவில் இதுபோல மேலும் பல தாக்குதல்கள் நடத்தப்படும். இதுவே கடவுளின் விருப்பம் என்று பின்லேடன் கூறியுள்ளார்.

இதுஇவ்வாறிருக்க, தன் தந்தையை கொன்றால், உலகம் முழுவதும் உள்ள அவரது ஆதரவாளர்கள் தாக்குதல் நடத்தி பேரழிவை ஏற்படுத்துவார்கள் என்று பின்லேடனின் மகன் ஒமர் எச்சரித்துள்ளார். சர்வதேச பயங்கரவாதி ஒசாமா பின்லேடனின் 11 மகன்களில் ஒருவர் ஒமர் லேடன். அவர் சூடான், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளில் உள்ள தீவிரவாத முகாம்களில் தங்கி தீவிரவாத பயிற்சி பெற்றார். 2001ம் ஆண்டு அமெரிக்க தாக்குதல் நடப்பதற்கு சில மாதங்களுக்கு முன்பு அவர் தன் தந்தையை விட்டு பிரிந்து விட்டார்.

2007ம் ஆண்டு அவர், தன் வயதை விட இரு மடங்கு அதிக வயதுள்ள பிரித்தானியப் பெண்ணை மணந்து கொண்டதன் மூலம் பரபரப்பை ஏற்படுத்தினார். இவர் தன் மனைவியுடன் அங்கு சென்று வசிக்க முயன்றார். அவரை தமது நாட்டிற்குள் நுழைய பிரித்தானியா அனுமதிக்கவில்லை. கத்தார், எகிப்து, ஸ்பெயின் நாடுகளும் அவருக்கு அனுமதி மறுத்து விட்டன.

சிரியா நாட்டில் டமாஸ்கஸ் நகரில் அவர் அமெரிக்க பத்திரிகை ஒன்றுக்கு பேட்டி அளித்தார். அதில் அவர் கூறியிருப்பதாவது, ஆப்கானிஸ்தானுக்கு அதிக துருப்புகளை அனுப்பியதன் மூலம் ஒபாமா தவறு செய்து விட்டார். நான் அவர் இடத்தில் இருந்தால், தீவிரவாதிகளுடன் சமரசம் செய்து கொண்டு இருப்பேன். இராணுவத்தை திருப்பி அனுப்பி இருப்பேன். ஆப்கானிஸ்தானில் அமெரிக்காவுக்கு ஒருபோதும் வெற்றி கிடைக்காது. இதற்கு என் தந்தை காரணம் இல்லை. ஆப்கானிஸ்தானியர்களின் போர்க்குணம் தான் காரணம். 2000ம் ஆண்டு புஷ் ஜனாதிபதியாக தேர்ந்து எடுக்கப்பட்டபோது என் தந்தை ரொம்பவும் சந்தோசப்பட்டார். ஏனெனில், புஷ் தான் அமெரிக்காவுக்கு அப்போது தேவைப்பட்ட தலைவர் என்று அவர் கூறினார். பிறநாடுகளின் மீது தாக்குதல் நடத்தி, அதற்காக பணத்தை செலவிட்டு நாட்டை அழித்து விடுவார் என்று என் தந்தை கணித்திருந்தார்.

என் தந்தையை அமெரிக்காவால் கொல்ல முடியாதது அந்த நாடு செய்த அதிர்ஷ்டம். அவர் மட்டும் கொல்லப்பட்டு இருந்தால், நிலைமை இன்னும் மோசமாகி இருந்திருக்கும். அவர் மட்டும் கொல்லப்பட்டால், உலகம் முழுவதும் உள்ள தீவிரவாதிகள் தாக்குதல்கள் நடத்தி பேரழிவை ஏற்படுத்துவார்கள். என் தந்தை மதப்பற்று உள்ளவர். அவருக்கு என்று இலட்சியம் உள்ளது. தேவை ஏற்பட்டால் மட்டுமே கொலைகளை செய்வார். மிகப்பெரிய அளவில் தாக்குதல் நடத்தவேண்டிய தேவை அவருக்கு இப்போது இல்லை என்றே நான் கருதுகிறேன். அமெரிக்காவை அவர் நிலைகுலைய செய்து விட்டார். அந்த அளவில் இது அவருக்கு சாதனை தான். ஆப்கானிஸ்தானுக்கு அமெரிக்கப் படையினர் சென்றதுமே அவர் நினைத்த திட்டம் செயல்பட தொடங்கி விட்டது. அவர் ஏற்கனவே வெற்றி பெற்றுவிட்டார். இவ்வாறு ஒமர் லேடன் கூறியுள்ளார்.



ஆப்கானிஸ்தானில் நிலைகொண்டுள்ள அமெரிக்கா தலைமையில் நேட்டோ படையினர் மேலும் 5 ஆண்டுகளுக்கு அங்கு தங்கி இருப்பார்கள் என்று இலண்டனில் நடந்து வரும் மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இலண்டனில் தீவிரவாதம் பற்றி விவாதிப்பதற்கான உலக மாநாடு நடந்து வருகிறது. இந்த மாநாட்டில் அமெரிக்கா, பிரித்தானியா, இந்தியா, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், நேட்டோ நாடுகள் ஆகியவற்றின் தலைவர்கள் கலந்து கொண்டனர். இந்த மாநாட்டில் தான் அந்நிய இராணுவம் மேலும் 5 ஆண்டுகள் தங்குவதற்கு முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இந்த மாநாட்டில் நிறைவேற்றப்பட இருக்கிற தீர்மானத்தின் ஒரு பகுதி கசிந்து ரைம்ஸ் பத்திரிகைக்கு கிடைத்து உள்ளது. அது இந்த தீர்மானத்தை வெளியிட்டுள்ளது. 2001ம் ஆண்டு முதல் ஆப்கானில் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட பன்னாட்டு இராணுவம் தங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.